(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 34.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2024 யூலை 09, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1909/2024

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்மலானை டிப்போவினால் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட கல்கிஸ்ஸை பிரதான பேருந்து தரிப்பிடத்தை, அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு தாக்கம் செலுத்திய காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரதான பேருந்து தரிப்பிடத்தை நிறுவுவதற்கு கையகப்படுத்தப்பட்ட காணியின் ஆரம்ப உரிமையாளரின் பெயர் மற்றும் நில வரைபட இலக்கம் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(iv) மேற்படி பிரதான பேருந்து தரிப்பிடத்தை நிறுவுவதற்குப் பயன்படுத்திய காணியின் அளவு யாதென்பதையும்;

(v) பிரதான பேருந்து தரிப்பிடத்தை நிறுவுவதற்கு மேற்படி காணியை கையகப்படுத்திய வருடம் யாதென்பதையும்;

(vi) தற்போது அக்காணி எந்த நிறுவனத்திற்கு உரித்தானது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1913/2024

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்திலுள்ள அரச மருந்தகங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு மருந்தகமும் அமைந்துள்ள இடத்தின் முகவரி வெவ்வேறாக யாது;

(iii) கொழும்பு மாவட்டத்தில் அரச மருந்தகக் கிளை வலையமைப்பினை மேலும் விஸ்தரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1917/2024

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை தொழில் பிணக்குகள் தொடர்பில் தொழில் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளில் இன்றளவில் தீர்க்கப்பட்டுள்ள மற்றும் தீர்க்கப்படாதுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) தொழில் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் மூலமாக நட்டஈடு வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1942/2024

கௌரவ மிலான் ஜயதிலக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பாலுற்பத்திப் பொருட்களின் அளவு ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) இலங்கையில் ஆண்டொன்றில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலுற்பத்திப் பொருட்களின் அளவு யாதென்பதையும்;

(iii) இலங்கையில் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலுற்பத்திப் பொருட்களின் அளவானது, ஆண்டொன்றில் இலங்கைக்குத் தேவையான பாலுற்பத்திப் பொருட்களின் அளவில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(iv) பாலுற்பத்திப் பொருட்கள் அதிகளவில் நுகரப்படும் மாகாணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் அதிகளவு பாலுற்பத்தி செய்யப்படுகின்ற பிரதேசம் யாதென்பதையும்;

(ii) இலங்கையில் பாலுற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1969/2024

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சுங்கத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி யாதென்பதையும்;

(ii) சுங்கத் திணைக்களத்தின் ஊழியர்களின் எண்ணிக்கையும் இணைந்த சேவையின் ஊழியர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) சுங்கத் திணைக்களத்தின் நிறைவேற்று அலுவலர்களுக்கும் கனிஷ்ட அலுவலர்களுக்கும் செலுத்தப்படுகின்ற மாதாந்த ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் ஒவ்வொரு பதவிக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) இணைந்த சேவையின் நிறைவேற்று அலுவலர்களுக்கும் கனிஷ்ட அலுவலர்களுக்கும் செலுத்தப்படுகின்ற மாதாந்த ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் ஒவ்வொரு பதவிக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1995/2024

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடும் வரட்சி காரணமாக ஹம்பாந்தோட்டை, உடவலவ வலயம், கிரம ஒய வலயம் மற்றும் மலலஆர வலயம் உட்பட தென் கிழக்கு சமவெளி வலயங்கள் பலவற்றில் விளைநிலங்கள் அழிவடைந்துள்ளமையினை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்காக 'சுரகிமு ருஹுணு' அமைப்பினால் முன்மொழியப்பட்டுள்ள, பழைய நீர்ப்பாசன பாதுகாப்பு கட்டமைப்பினை முறைப்படுத்தல் மற்றும் ஈர வலயத்தின் மேலதிக நீரை மேற்குறிப்பிட்ட வலயங்களுக்கு அனுப்புதல் (களு கங்கையை திசைதிருப்பும் கருத்திட்டம்) என்ற இரண்டு தீர்வுகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்குறிப்பிட்ட வலயங்களில் நிலவும் நீர்ப் பற்றாக்குறையை போக்குவதற்காக மேற்கொள்ள எதிர்பார்க்கும் துரித நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் நிறுத்தப்பட்டுள்ள கிங் கங்கை, நில்வளா கங்கை கருத்திட்டங்களை மீளவும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

2008/2024

கௌரவ மயந்த திசாநாயக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலப்பரப்பின் மொத்த அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பரப்பில் அரச மற்றும் தனியார் துறைக்குச் சொந்தமான நிலப்பரப்பின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தேயிலை உற்பத்தியின் மூலமாக ஈட்டப்படும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) இன்றளவில் சேதனப் பசளையைப் பயன்படுத்தி தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) சேதனப் பசளையைப் பயன்படுத்துவதன் மூலமாக வருடாந்தம் பெற்றுக்கொள்ளப்படும் தேயிலை அறுவடையின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடுகள் யாவையென்பதையும்;

(ii) வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி ஏற்றுமதியின் மூலமாக ஈட்டப்படும் வருடாந்த அந்நியச் செலாவணியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iv) உலக தேயிலைச் சந்தையில் இலங்கையின் தேயிலைக்குக் கிடைத்துள்ள இடம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

2024/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் குழப்பகரமான நிலைமைகளைத் தோற்றுவிக்கக்கூடிய செய்திகளை வெளியிடும் பல போலி ஊடகங்கள் இலங்கையில் செயற்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஊடகங்கள் யாவையென்பதையும்;

(iii) பதிவு செய்யப்படாத போலி இணையத்தளங்களைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2042/2024

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அரச ஊழியர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியம் செலுத்துவதை ஆரம்பிக்க சுமார் பத்து மாதங்களுக்கும் அதிகமான காலம் எடுக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) இத்தாமதம் காரணமாக சில அரச ஊழியர்கள் தமது முதலாவது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு முன்னர் மரணிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தாமதமானது அரச ஊழியர்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி தாமதத்திற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறித்த தாமதத்தைத் தடுப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தாமதத்தைத் தடுப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2055/2024

கௌரவ வேலு குமார்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யுனெஸ்கோ அமைப்பினால் கண்டி நகரம் உலக மரபுரிமை நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இலங்கைக்கு வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் மேற்படி நகரில் அமைந்துள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) கண்டி நகரில் அமைந்துள்ள உலக மரபுரிமைகளாக அடையாளங் காணப்பட்டுள்ள புனித இடங்களும் கட்டடங்களும் யாவை என்பதையும்;

(ii) அவற்றைப் பாதுகாப்பதற்கு யுனெஸ்கோ அமைப்பு நிதி உதவி அளிக்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அளிக்கப்படுகின்ற வருடாந்த நிதி உதவி எவ்வளவென்பதையும்;

(iv) கண்டி நகரில் அமைந்துள்ள உலக மரபுரிமைகளாக அடையாளங் காணப்பட்டுள்ள தனியார் கட்டடங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கட்டடங்களின் உரிமையாளர்களுக்கும் யாதேனும் நிதி உதவி வழங்கப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி நிதி உதவி எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (ஆ) (i) இல் குறிப்பிடப்பட்ட இடங்கள் உள்ளபடியே பேணப்படுமா என்பதையும்;

(ii) அவற்றில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கண்டி நகரை உலக மரபுரிமை நகரமாக பேணிச் செல்வதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்ற சபை முதல்வர்,— துறைசார் மேற்பார்வைக் குழுக்கள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 111 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 நவம்பர் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேணையினால் தடைபெறாமல் 2024 யூலை 03 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவானது தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இருபத்திரண்டு (22) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

2.

பாராளுமன்ற சபை முதல்வர்,— அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேணையினால் தடைபெறாமல், 2024 யூலை 03 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவானது தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இருபது (20) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

3.

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“இசிவர அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

4.

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“மனித வளங்கள் துறைசார் வல்லுனர்களின் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

5.

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— ஜீ.எஸ்.எம்.பீ. தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2021),— 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 154(6) ஆம் பிரிவின் கீழ் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஜீ.எஸ்.எம்.பீ. தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனியின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.02.08/2024.02.09 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.03.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*3.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— டவர் மண்டப அரங்கத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2021),— 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, டவர் மண்டப அரங்க மன்றச் சட்டத்தின் 12(5) ஆம் பிரிவின் கீழ் 2023.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய டவர் மண்டப அரங்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் நவீன பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.01.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.01.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*4.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவின் கீழ் 2023.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து அலுவல்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.01.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

5.

மாத்தறைப் பருவம் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

6.

ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

7.

சமாதி தியான மற்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

8.

இலங்கை வரைதல் தொழினுட்பவியலாளர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுவரி உரிமக் கட்டணங்கள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 ஜனவரி 12 ஆம் திகதிய 2366/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2024)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணங்கள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 01 ஆம் திகதிய 2369/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 03/2024)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மே 17 ஆம் திகதிய 2384/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மே 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பிரதேசத்தில் “பிரத்தியேக புடவை தயாரித்தல் வலயம்” தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மார்ச் 28 ஆம் திகதிய 2377/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.05.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பால்நிலைசார் சமத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21

வெளிநாட்டுத் தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல், மற்றும் வலுவுறுத்துதல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22

குடிவரவுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 சனவரி 24 ஆம் திகதிய 2368/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம்,— 2022 மார்ச் மாதத்தில், அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் தொடர்ச்சியான வீழ்ச்சியை கண்டிருந்தமையால், இலங்கை கடுமையான நிலையான படுகடன் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தமையாலும் இதன் விளைவாக, இலங்கை நாணயச் சபையின் ஆலோசனையின் பேரில், பொருளாதார நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுப்பதற்காக இலங்கை வெளிநாட்டு பொதுப்படுகடன் மீள் கொடுப்பனவுகளை இடைநிறுத்தியிருந்தமையினாலும்;

இந்த கடுமையான பிரச்சினை பற்றி பொதுமக்களுக்கு வெளிப்படையாக வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF ) கடனை மறுசீரமைப்பதற்கும், நெருக்கடிக்கு தீர்வைவொன்றைக் காண்பதற்கும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தமையினால் அக்கறை தாரர்களின் ஆலோசனையின் பேரில், இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நிதி ஆலோசகர் லஸார்ட் (Lazard) மற்றும் சட்ட ஆலோசகர் க்ளிஃபர்ட் சான்ஸ் எல்எல்பீ (Clifford Chance LLP) ஆகியோர்களை நியமித்திருந்தமையினாலும்;

சர்வதேச நாணய நிதியமானது (IMF), இலங்கையின் நிதியியல் நிலைமை பற்றிய விரிவான மீளாய்வொன்றை மேற்கொண்டிருந்ததுடன், சவால்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை வரையறுத்து நிலையான படுகடன் பற்றிய மதிப்பீடொன்றை வெளியிட்டிருந்தமையினால் சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலுக்கமைவாக, கடுமையான கடன் மறுசீரமைப்பு நடைமுறை பின்னர் இலங்கையால் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையினாலும்;

இருதரப்பு கடன்வழங்குநர் மீள்கொடுப்பனவுகளையும், இறையாண்மை பிணை உரிமையாளர்களுக்கான கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியுள்ள வெளிநாட்டுக் படுகடன் திருப்பிச் செலுத்தல்கள் இடைநிறுத்தப்பட்ட போதிலும், பலதரப்பு படுகடன் கொடுப்பனவு களைத் திருப்பிச் செலுத்துவதில் இலங்கை தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தமையினாலும்;

2023 யூன் 28 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தினைத் தொடர்ந்து, பொதுப்படுகடனைச் செலுத்துவதில் உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதற்கு இலங்கையின் உள்நாட்டு படுகடன் உகந்தநிலைக்கு ஆக்கப்படுதல் வேண்டும் என்று பாராளுமன்றம் தீர்மானித்திருந்தமையினாலும்;

உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையானது, சர்வதேச நாணய நிதியத்தின், நிலையான படுகடனைச் செலுத்துகின்ற மதிப்பீட்டிற்கு அமைவாக இலங்கையால் நடத்தப்பட்டு வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டமையினால், இதன் விளைவாக, வெளிநாட்டுக் கடன்களின் எஞ்சிய இரண்டு பிரிவுகள் இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் இறையாண்மை பிணை உரிமையாளர் களுக்கான கொடுப்பனவுகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தமையினாலும்;

சர்வதேச நாணய நிதியத்தின் நிலையான படுகடன் அளபுருக்களுக்கேற்ப இருதரப்பு கடன்களை மறுசீரமைப்பதற்காக, பிரான்ஸ், யப்பான் மற்றும் இந்தியா ஆகியவற்றின் தலைமையின் கீழ் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவொன்று (OCC) அமைக்கப்பட்டிருந்தமையினாலும், அதேவேளை, இலங்கையானது சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கியுடன் (EXIM Bank) உத்தியோகபூர்வக் கடன் வழங்குநர் குழுவாக அதே அளபுருக்களுக்குள் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தமையினாலும்;

எதிர்காலத்தில் சாத்தியமான நேர்மறையான கடன் மீளாய்வுகளுக்கு வழிவகுத்து, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழு (OCC) மற்றும் சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவற்றுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின் வெற்றிகரமான முடிவை கோடிட்டுக் காட்டும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தை 2024 யூன் 26 ஆம் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தமையினாலும்;

சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான அணுகுகையை இலகுபடுத்தவுள்ள இந்த மூலோபாய மற்றும் அளபுரு அணுகுமுறையின் விளைவாக செம்மைப்படுத்தப்பட்ட கொடுகடன் தரப்படுத்தல்களை அடைவதற்கு இலங்கை எதிர்பார்க்கின்றமையினாலும்;

அரசாங்கத்தின் தொடர்ச்சியான வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறித்துகாட்டி, இலங்கை அரசாங்கமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவும் (OCC), 2024 யூன் 26 ஆம் திகதி பரிஸில் படுகடன் மறுசீரமைப்பு இறுதி உடன்படிக்கையொன்றினை எய்தியிருந்ததுடன், இலங்கை அரசாங்கம் மற்றும் சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவை பெய்ஜிங்கில் கடன் மறுசீரமைப்பு இறுதி உடன்படிக்கையொன்றினை எய்தியிருந்தன. இந்த உடன்படிக்கைகள், இலங்கையானது, கடன் வழங்கும் நாடுகளுடன் புதிய ஈடுபாட்டுடன் அதன் இருதரப்பு பொருளாதார உறவுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வழிவகுக்கின்றமையினாலும்;

சர்வதேச நாணய நிதியத்தின் நிலையாக படுடைனைச் செலுத்துதல் பற்றிய பகுப்பாய்வுடன் ஒத்துப்போகும் வகையில் படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள், படுகடனை நிலையாகச் செலுத்துவதனை மீள அடைவதற்கு கருவியாக அமைந்துள்ளன. மேலும், அவை விரைவான பொருளாதார மீட்சிக்கு உதவி, நிலையான வளர்ச்சியைப் பேணி இலங்கையின் பொருளாதாரத்தை குறிப்பிடத்தக்களவு மாற்றியமைப்பதற்கும் தயாராகவுள்ளமையினாலும்;

2024 யூன் 26 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பின்வரும் உடன்படிக்கைகளை அமுல்படுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்குவதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் படுகடன் மறுசீரமைப்புத் தொடர்பில், இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவிற்கும் (OCC) இடையில் 2024 யூன் 26 ஆம் திகதி எய்தப்பட்ட இறுதி உடன்படிக்கை; மற்றும்

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கும் (EXIM Bank) இடையில் 2024 யூன் 26 ஆம் திகதி எய்தப்பட்ட கடன் உடன்படிக்கைகளுக்கான இறுதித் திருத்த உடன்படிக்கை.

*27.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*29.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 நவம்பர் 27 ஆம் திகதிய 2360/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 13 ஆம் திகதிய 2371/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

31.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

ஹெக்டர் அப்புஹாமி ஹெல்பிங் ஹேண்ட் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

ஜனரஜ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

வன்னி மண் அறக்கட்டளை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.